**Volume: 02** **Issue 03** **Nov: 2023**

**களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்**
**KALANJIYAM International Journal of Tamil Studies**
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழும் இருளர் பழங்குடி மக்களின் சமுதாய நிலை

*பு.புரட்சி செல்வி முனைவர்பட்ட ஆய்வாளர்,*

*முனைவர். சி.கமலாதேவி, உதவிப்பேராசிரியர்*

*வரலாற்றுத்துறை இராணி மேரி கல்லூரி, சென்னை.*

*செல்: 9087781421*

*மின்னஞ்சல்: ிரசயவஉ_ான2689;பஅயடை.உ_ழஅ*

**ஆய்வுச ் சுருக்கம்**

பழங்குடிகள் தங்களுக்கு என்று ஒரு சமூக கலாச்சார அமைப்பில் தொன்று தொட்டு இன்றளவும் வாழ்ந்து வருகிறார்கள். தமிழகத்தில் 36-க்கும் மேற்பட்ட பழங்குடியினர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் இருளர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். இருளர்களில் ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் சமமாக வாழ்ந்து வருகிறார்கள். அதோடு கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறார்கள். திருமணத்தின்போது வரதட்சணை கொடுப்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை. குறிப்பாக மணவிலக்கு (விவாகரத்து) முறை இவர்களிடையே காணப்படவில்லை. தங்களுக்கு பிடித்தவருடன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம். இவர்கள் கொண்டாடும் தனித்துவமான விழாக்கள் திருமணவிழா, காதணிவிழா, பூப்படைதல் விழா போன்ற விழாக்கள் மற்றும் இறந்தவர்களுக்கு செய்யும் ஈமச்சடங்கு ஆகியவை பின்பற்றப்பட்டு வருகிறது. சமுதாயம் நாகரீக தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்திருந்தாலும் பாரம்பரியமான வாழ்க்கை முறையை பின்பற்றி வருவதால் இவர்கள் பொது வெளியில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகிறார்கள். இவ்வாறு தங்கள் பாரம்பரிய கொள்கையில் இருந்து வழுவாமல் வாழ்ந்து வரும் மக்களுக்கு அரசாங்கமும், மக்களும் அவர்களின் வளர்ச்சி திட்டங்களின் மூலம் அவர்களின் கலாச்சாரத்தை மாற்றாமல் (சீர்குலைக்காமல்) காப்பற்ற வேண்டும். இந்த கட்டுரையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழும் இருளர்களின் கலாச்சாரத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் இக்கட்டுரையின் வழி பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

திறவு சொற்கள்: **இருளர்கள், கலாச்சாரம், பாரம்பரியம், விழாக்கள்**

**முன்னுரை**

மனிதகுலம் இன்று பல்வேறு இனங்களாகவும் பல நூறு தேசிய இனங்களாகவும், பல ஆயிரங்களுக்கும் மேற்பட்ட சமூகங்களாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதில் மிகத் தொன்மையாக விளங்குபவர்கள் ‘‘பழங்குடி’’ மக்கள். இத்தொன்மைச் சமூகங்களை இனங்கண்டு ஆராய்வதும் பதிவு செய்வதும் மனித குல வரலாற்றின்படி மலர்ச்சியை அறிவதற்கு உதவிபுரியும். மனித குலத்தின் தொல்சமூக பண்பாட்டில் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சிகளை அறிவதற்கு இன்று சான்றாக விளங்குபவர்கள் பழங்குடிகளே. இன்றைய சூழலில் ‘‘பழங்குடி’’ எனும் சொல் பலதர நிலைகளில் வாழும் பழங்குடிப் பிரிவினர்கள் அனைவரையும் பெருமைபடுத்தும் ஒரு சொல்லாட்சியாக இருந்து வருகிறது. பழங்குடியினர் என்று கூறப்படும் மக்கள் தங்களுக்கு என்று தனிப்பட்ட நாகரிகம், தொன்மையான கலாச்சாரம், மொழி, பழக்கவழக்கங்கள் என்று காலம் காலமாக பின்பற்றி அதை சார்ந்து தங்கள் வாழ்க்கை தரத்தை அமைத்து வாழ்ந்து வருபவர்கள். தங்களுக்கே உரிய நிலத்தில் தங்களின் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டு சவாலான இயற்கை சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

**கருதுகோள்**

1. காஞ்சிபுரத்தில் வாழும் இருளர் இன மக்களின் கலாச்சாரம் மற்றும் சமுதாய ஒற்றுமைப் பற்றி கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.
2. இருளர்களின் திருவிழாக்கள், சடங்கு சம்பிரதாயங்கள் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**ஆய்வு அணுகுமுறை**

ஆய்வுத் தரவுகளின் அடிப்பபடையில் கருத்துகளும், திறன்களும் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி விளக்கமுறை, பகுப்பாய்வுமுறை ஆய்வு செய்வதற்கு ஆய்வின் அணுகுமுறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பகுதி**

காஞ்சிபுரம் பற்றிய பழமையான குறிப்பு அகநானூற்றில் உள்ளது. ‘‘காஞ்சியூரே’’ என்னும் சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சொல்லின் பொருள் காஞ்சிமரங்கள் சூழ்ந்த ஊரைச் சேர்ந்தவன் என்பதாகும்.

**‘‘பயறுபோல் இனா பைந்தாறு**

**படிஇயர், உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்**

**காஞ்சியூரான்’’** (குறுந். 10:2-4)

காஞ்சிபுரம் வரலாற்று புகழ்மிக்க புண்ணிய பூமிகளுள் ஒன்று. காஞ்சிபுரம் கோவில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு

பல்லவர்கள், சோழர்கள், விஜயநகர அரசுகள் ஆட்சி செய்துள்ளார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 பஞ்சாயத்துகளில் 46க்கும் மேற்பட்ட கிராமங்களில் 100க்கும் மேற்பட்ட இருளர் மக்கள் வசித்து வருகிறார்கள். அதில் திருப்போரூர் பேரூராட்சிக்கு உட்பட்ட 5 கிராமப் பகுதிகள் (ஆலந்தூர், எடையான்குப்பம், செந்நேரி, தையூர், திருப்போரூர்) இக்கட்டுரைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் பழங்குடியினர்கள்**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பழங்குடியினர் 7.95 இலட்சமாக உள்ளனர். அதாவது தமிழகத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.10 விழுக்காடு உள்ளனர். பழங்குடியின மக்கள் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தின் அழிவின் விளிம்பில் உள்ளனர்.[1] தமிழ் நாட்டில் 36 வகையான பழங்குடியினர்கள் பல்வேறு மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அதில் 6 வகை பழங்குடியினர்கள் அதாவது (இருளர், தோடர், கோத்தர், குரும்பர், பணியர் மற்றும் காட்டு நாயக்கர் ஆவார்கள். இவ் 6 வகை பழங்குடியினர்களை அரசு அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர். (Particularly Vulnerable Tribal Groups) PVTG

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்களை பின்வரும் நிலையில் அடையாளம் காணுகின்றனர்.

1. விவசாயத்திற்கு முந்தைய நிலையில் தொழில் நுட்பத்திறன்
2. குறைந்த படிப்பறிவு நிலை
3. குறைந்த மக்கள் தொகை

என்பதை கணக்கீடு செய்துள்ளார்கள்.[2]

**இருளர்கள்**

மக்கள் வாழும் பகுதியில் வாழாமல் இருண்ட அடர்ந்த காட்டுப் பகுதியில் சென்று வாழ முற்பட்டதால் “இருளர்கள்” என்று அழைக்கப்பட்டார்கள். இருளர்கள் மிகக் கருத்த நிறமுடையவர்களாக உள்ளார்கள். இருளன் என்ற சொல் இருட்டு அல்லது கருப்பு என்ற பொருளைத் தருவது. இவர்கள் தனித்து ஒதுங்கி இருக்கும் இருண்ட காட்டைக் குறித்து இப்பெயர் அமைந்ததா அல்லது இவர்களின் நிறத்தை குறித்து இப்பெயர் அமைந்ததா என்பது தெளிவாகபுரியவில்லை.[3] செங்கல்பட்டு இருளர்கள் நல்ல கருத்த நிறமும், குறுகிய மார்பும் மெலிந்த உடலும், பிடிப்பற்ற தசைகளும் உடையவர்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழாமல் இவர்கள் தங்கள் குடியிருப்பை அடிக்கடி மாற்றி கொண்டு இருப்பார்கள் பனையோலை வேயப்பட்ட தாழ்ந்த குடிசைகளில் வாழ்கின்றனர்.[4]

**இருளர்களின் பிரிவுகள்**

1. மலைவாழ் இருளர்கள் (மேலநாடு இருளர்கள்)
2. சமவெளி இருளர்கள்
3. கடற்கரைவாழ் இருளர்கள்

### மலைவாழ் இருளர்கள்

மலைவாழ் இருளர்கள் மேலநாடு இருளர் எனப்படுவார்கள். இவர்கள் நீலகிரி மாவட்டத்தில் அதிகமான இருளர்கள் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மாசினாங்குடி, கோத்தகிரி பகுதியில் தங்களின் தொன்மை மாறாமல் இன்றளவும் வாழ்ந்து வருகிறார்கள்.

### சமவெளி இருளர்கள்

இன்றைய வட தமிழகத்தில் இருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு புலம் பெயர்ந்து தமிழகத்தின் பல்வேறு சமவெளிப் பகுதியிலும், கடலோரப் பகுதிகளிலும் குடியேறினார்கள்.[5] காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, வேலூர் முதலான மாவட்டங்களில் பரவி வாழ்கின்றனர். வேட்டை காரன், வில்லி, சிகாரி, இருளர் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார்.[6]

### கடற்கரை வாழ் இருளர்கள்

கடலூர், காஞ்சிபுரம், பொறையாறு, தரங்கம்பாடி உள்ளிட்ட கடற்கரை மாவட்டங்களில் தமது வாழ்விடத்தை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள்.

### சமவெளி இருளர்களின் உட்பிரிவுகள்

வில்லியர், இருளர், வேடர், வேடுவர் வேட்டைக்காரர் போன்ற பெயர்களில் மற்ற சாதியில் குறிப்பிடப்படுவார்கள். வேட்டைத் தொழில் பழங்குடிகளிடம் காணப்படும் பொதுவான தொழில்.[7]

### குடும்பம்

மனித சமுதாயத்தின் அடிப்படை குடும்பம் ஆகும். ‘‘நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்’’ என்று பாரதிதாசன் கூறுகிறார். இருளர் சமூகத்தில் குடும்பம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இருளர்கள் பெரும்பாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையை வாழ்கிறார்கள். குடும்பத்தில் பெண் முக்கிய பங்கு வகிக்கிறார். ஆண், பெண் இருவரும் சமமாக நடத்தப்படுகிறார்கள். குடும்பத்தின் தலைவராக தந்தை கருதப்படுகிறார். தந்தை இல்லாத பட்சத்தில் குடும்ப பொறுப்பை தாய் ஏற்கிறார். குடும்பத்தில் அப்பா, அம்மா, அக்கா, அண்ணன், தம்பி, தங்கை, மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா, தாத்தா, பாட்டி போன்ற அனைத்து உறுப்பினர்களும் காணப்படுகிறார்கள்.[8] வனங்களுக்குள் வாழ்வதால் இம் மக்கள் கூட்டுக் குடும்பமுறையை வாழ்கிறார்கள். கிராமத்தில் ஓரத்தில் அதாவது காட்டின் அருகில் அல்லது ஏரி, குளங்களுக்கு அருகில் தங்கள் குடிசைகளை அமைத்து வாழ்கிறார்கள். இவ்வாறு ஆபத்தான பகுதியில் வாழ்வதாலும் கூட்டுக் குடும்பமாக வாழ்கிறார்கள் என்று கள ஆய்வில் சாத்தமை கிராமத்தில் உள்ள சித்ரா அவர்கள் கூறியதை கேட்க முடிந்தது.[9] கள ஆய்வு ஆகஸ்ட் 26, 2020.

**இருளர்களின் திருமணமுறை**

ஒரு சமூகத்தில் இன்றியமையாத ஒரு நிகழ்வு திருமணம் ஆகும். இந்நிகழ்வு ஒவ்வொரு சமூகத்திலும் மாறுபட்டு காணப்படுகின்றது.

இவர்கள் 3 வகையான திருமணமுறையை மேற்கொள்கிறார்கள்.

1. உடன் போக்குத் திருமணம்
2. பணி செய்திருமணம்
3. பெற்றோர்களால் நடத்தப்படும் திருமணம்

**உடன்போக்குத் திருமணம்**

இருளர் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு காதலர்களாக வாழ்ந்து திருமணம் செய்துகொள்ள முடிவு எடுக்கும் போது பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்தால் அவர்கள் பெற்றோர்களின் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொள்வார்கள். இதற்கு உடன்போக்குத் திருமணம்.

**பணி செய் திருமணம்**

காதலிக்கும் பெண்ணின் வீட்டிற்கு மணமகன் சென்று அவர்களுடன் தங்கி ஓரிரு ஆண்டுகள் பணி செய்த பின்னர்த் திருமணம் செய்து கொள்கின்றனர். இருளர் இளைஞர் ஒருவர் விரும்பும் பெண்ணின் வீட்டில் தங்கி அப்பெண்ணின் வேலையையும், விவசாயக் கூலி வேலைகளையும் செய்து அவன் சம்பாதிக்கும் பணம் அனைத்தும் மணப்பெண் வீட்டிற்குச் சேரும் இம்மாப்பிள்ளையை ‘‘மெனமாப்பிள்ளை’’ என்பர். அதாவது ‘‘வீட்டுமாப்பிள்ளை’’ என்பது பொருள்.

**பெற்றோர்களால் நடத்தப்படும் திருமணம்**

ஆரம்ப காலக் கட்டங்களில் இருளர் இனத்தில் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்த இருளர்கள் அதாவது முறை ஏதும் இல்லாதவர்களைக்கூட திருமணம் செய்வார்கள். இருளர்கள் முதன் முதலில் பெண் பார்க்கச் செல்லும் முன்பு பெண் வீட்டின் கிராமம், வீடு பற்றிய குறிப்புகளை முதலில் தெரிந்து கொள்வார்கள்[10] பெற்றோர்கள் அனைத்து சொந்த பந்தங்களுடன் கூடி நடத்தப்படும் திருமணம் ஆகும்.

**திருமணத்தின்போது பின்பற்றப்படும் வழிமுறைகள்**

திருமணத்தின் முக்கிய நிகழ்வு பரிசம் போடுதல். பரிசம் போடும் நிகழ்வு திருமணத்திற்கு முந்தைய நாளில் பெண் அழைப்பில் நடைபெறும் நிகழ்வு ஆகும். மாப்பிள்ளை வீட்டார்கள் சிலர் தங்கள் உறவினர்களுடன் பெண் வீட்டிற்கு செல்வார்கள் அப்போது மணப்பெண்ணிற்கு தேவையான புடவை, பூ, பழம், வெற்றிலைப்பாக்கு தேங்காய் என 5 தாம்பூலத்தட்டு இடம்பெறும் இதை மணப்பெண்ணின் தாயிடம் கொடுப்பார்கள்

அப்போது மாப்பிள்ளை வீட்டார் மணமகளின் தாயிடம் ஒரு குறிப்பிட்ட தொகை அளிப்பார்கள் அத்தொகை அவர்களின் வசதிக்கேற்ப 5 ரூபாயில் இருந்து 101, 501, 1001 என்று அதிகரிக்கும் அவ்வாறு கொடுக்கப்படும் தொகை பால்கூலி என்று அழைப்பார்கள். இவ்வாறு பரிசம் போடுதல் நடைபெறும். பரிசம் போடும்போது வரதட்சணை ஏதும் மாப்பிள்ளை வீட்டார் கேட்டதில்லை. பெண் வீட்டார் விருப்பத்தின் பேரில் ஏதாவது வீட்டிற்கு தேவையான பொருட்கள் அவர்களின் வசதிக்கேற்ப அளிப்பார்கள். அதுவும் கட்டாயமில்லை என்று கள ஆய்வு டிசம்பர் 15, 2020 ஆலந்தூர் கன்னியம்மாள் கூறினார்.

**திருமணம் நடைமுறை**

திருமணம் செய்யும் மணமகன், மணமகள் வீடுகள் ஒரு சிறிய குடில் போலத் தான் இருக்கும் எனவே திருமண விருந்து என்பது பொதுவாக மணமகன் வீட்டில் நடைபெறுகிறது.[11] மூவர் தாலி எடுத்து தர மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுகிறான். இந்த தாலிமுறை என்பது தற்போது ஏற்பட்ட நவீன நாகரீகத்தின் அடையாளம் ஆகும். பண்டைய கால இருளர்கள் கருப்பு பாசிகளைத்தான் திருமணத்தின் போது பயன்படுத்தினார்கள். தற்போதும் நிறைய இருளப்பெண்கள் திருமணமான பெண்கள் கருப்பு பாசிகளை அணிந்துள்ளனர். (கள ஆய்வில் கண்டது டிசம்பர் 16, 2020) திருமணம் நிச்சமயமான பின்னர் ஒரு வருடத்திற்கு மணமாகாமல் சேர்ந்து வாழ்கிறாாகள். அவ்வாறு வாழும் நாட்களில் அவர்களுக்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றாலும், தங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் வேறு நபரை திருமணம் செய்து கொள்ள உரிமை உள்ளது. இருளர்கள் பெற்றோர் முன்னிலையிலும், உடன் போக்கின் முன்னிலையிலும் திருமணம் செய்து கொள்கிறார்கள். குறிப்பாக இருளர் சமுதாயத்தில் விதவை பெண்கள் இல்லை தாங்கள் விருப்பப்பட்டால் வேறு யாரையாவது மறுமணம் செய்து கொள்ளலாம் என்று சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.[12]

களஆய்வின் போது திருமணம் பற்றி சித்ரா (சாத்தமை கிராமத்தை சார்ந்தவர் கூறியதாவது. திருமணம் பெற்றேரின் சம்மமத்தின் பேரில் பெயரிவர்கள் முன்னிலையில் நடைபெறும் வசதி உள்ளவர்கள் பந்தல் போட்டு, மேளதாளங்களுடன் திருமணம் செய்து வைப்பார்கள் வசதி இல்லாதவர்கள் தங்கள் குல தெய்வமான கன்னியம்மன் முன்னிலையில் பெற்றோர்கள் தாலி எடுத்து கொடுக்க திருமணம் சாதாரணமாக நடைபெறும் எங்கள் இனத்தில் அதிகமாக காதல் திருமணம் நடைபெறுகிறது. வரதட்சணை என்று எதுவும் கொடுப்பது இல்லை என்கிறார்.

**கடற்கரை திருமணம்**

இருளர்கள் மாசி மகத்தை ஒரு திருவிழாவாக கொண்டாடுகிறார்கள். திருவிழாவை 3 நாள் கொண்டாடுகிறார்கள். இக்கொண்டாட்டத்தில் ஒன்றாக திருமணம் முக்கிய இடம் வகிக்கிறது. திருமணம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு கடற்கரையில் உள்ள கன்னியம்மனை வழிபட்டு புத்தாடை உடுத்தி மணமகள் ஆடம்பரமான அலங்காரம் இல்லாமல் மிகவும் சாதாரணமான மணப்பென் அலங்காரத்துடன் மாப்பிள்ளை வீட்டாரால் கொடுக்கப்பட்ட புதுப்புடவை (கோரபுடவை) அணிந்து அம்மன் முன்பு கடற்கரையில் குவிந்துள்ள தங்கள் சொந்த பந்தங்கள் முன்னிலையில் பெற்றோர்கள் தாலி எடுத்து கொடுக்க மணமகன் தாலி

கட்டுவார். தாலிகட்டும்போது மஞ்சல், பூ, அரிசி கலந்து (பருப்பு அரிசி) மணமக்கள் மீது தூவுவார்கள். அக்னிசாட்சி, புரோகிதர் என்று எதுவும் கிடையாது. அம்மனை பூஜிக்கும் பூசாரியே அனைத்துமாக நின்று செயல்படுவார். திருமணம் முடிந்து மணமக்கள் வீடு செல்வார்கள் அன்பளிப்பு என்று எதுவும் வழங்கப்படுவது இல்லை.[13]

**மணவிலக்கும் மறுமணமும்**

இருளர் இனமக்களிடம் பலதார மணம் மிகசொற்பமாக காணப்படுகிறது. ஓர் ஆண் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்து கொள்வது காணப்படுகிறது. அவ்வாறு செய்து கொண்டவர்கள் ஒரு சிலர் சேர்ந்து கூட்டுக்குடும்பமாகவும் சிலர் தனி குடும்பங்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இம்மக்கள் தாங்கள் விரும்பியவருடன் வாழலாம், கருத்து வேறுபாடு ஏற்பட்டால் பிரிந்து வேறொருவருடன் வாழலாம் என்ற கலாச்சாரத்தோடு வாழ்கிறார்கள். இக்காரணத்தினாலேயே இருளர் இனத்தில் விதவை பெண்கள் அதிகமாக காணப்படுவது இல்லை வயதான பெண்மணிகள் மட்டுமே விதவைகளாக இருக்கிறார்கள்.[14]

இந்து மதவழக்கப்படி "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கோட்பாட்டை இவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கை முறையை பின்பற்றவில்லை[15] ஆனால் தற்போது மற்ற சமூகத்தினருடன் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றார்கள். அதன் காரணமாக இம்முறையை பின்பற்ற தொடங்கி உள்ளார்கள். மறுமணம் செய்வதை கூடமறுக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இப்பண்பாட்டில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இருளர்கள் பிற சமூக மக்களோடு பழக அதிகமாக வாய்ப்புகள் இருப்பதாலும், மக்களிடையே விழிப்பணர்வு செய்யும் தொண்டு நிறுவனங்களின் பணியாலும் இவர்களின் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்தில் பிறசமூகத்தினரிடம் காணப்படும் ஆணாதிக்கம் தற்போது இம்மக்களிடையே வேரூன்ற ஆரம்பித்துள்ளது. ஆண்கள் தனக்கு மனைவி பிடிக்கவில்லை என்றாலோ, இறந்துவிட்டாலோ மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்கள் தற்போது அதற்கு சம்மதிப்பதில்லை. தன்னுடைய கணவர் இறந்துவிட்டால் பிறரை மணம் முடிக்க முன்வருவதில்லை. தங்களின் பாலின சமத்துவம் விரிசல் விழ ஆரம்பித்துள்ளது.[16]

**சடங்குகள் (விழாக்கள்)**

மனித சமூகத்தில் தம் வாழ்வியல் அனுபவங்களின் வாயிலாகக் கண்ட முடிவுகளை இதை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கூறிய முறைப்படி அப்படியே தொன்று தொட்டு செய்து வருவதுதான் சடங்குகள் எனப்படுகின்றன. மேலும் சடங்குகள் மனிதர்களிடத்தில் சமூக உறவுகளை ஆயத்தப்படுத்துவனவாகவும் அமைகின்றன.

**பூப்படைதல் - சடங்குமுறை**

பெண்கள் பூப்படைந்தவுடன் தாய் மாமன் சீர் செய்யும் முறை என்பது மெதுவானது. இருளர்கள் சமூகம் இதற்கு விதிவிலக்கல்ல. இருளப் பெண் பூப்பெய்திய ஏழாம் நாள் விழாகொண்டாடப்படுவர். பெண் பூப்பெய்தியவுடன் பெண் குடிசைக்குள் தனியாக இருக்கவைத்து விடுவார்கள். அவருக்கு தேவையான பொருட்களும் அவர்களுக்கு

வழங்கப்படும் அந்த 7 நாட்களும் பூப்படைந்த பெண்ணிற்கு சத்தான உணவுகள் வழங்கப்படும் தினமும் புத்தாடைகள் வழங்கப்படும். தாய்மாமன் அல்லது அக்காவின் கணவர் குடிசைக் கட்டுவர். ஏழாம் நாள் இந்த குடிசை எரிக்கப்படுகிறது. குடிசையில் வேப்பிலை அல்லது வேறு இலைகளைச் சொருகி வைப்பது வழக்கமாக உள்ளது. பின்பு ஏழு நாள் சென்றவுடன் வீட்டில் நீராடிவிட்டு தாய்மாமன் எடுத்து வந்த புதுத்துணியை உடுத்தச்சொல்வார்கள்[17] பிறகு அத்தைமுறையில் உள்ளவர்கள் பூப்பெய்திய பெண்ணிற்கு நல்லெண்ணெய், பச்சைமுட்டை, பாசி பருப்பு, வெல்லம், உளுந்து மாவு ஆகியவைகள் கலந்த ஒரு பருப்பு உருண்டை (கலி) அப்பெண்ணிற்கு கொடுப்பார்கள். கொடுத்தபின்னர் பெண்ணிற்கு அலங்காரம் முடிந்தவுடன் வீட்டிற்குள் அழைப்பார்கள்.[18]

**குழந்தை பிறப்புச் சடங்குகள்**

இருளர்கள் வளைகாப்புச் சடங்கை ‘‘முதுநீர் சடங்கு’’ என்பார்கள் இச்சடங்கு பெண்கருவுற்றதிலிருந்து ஏழாம் மாதம் அல்லது 9ம் மாதத்தில் நடைபெறும். இச்சடங்கு அறிவியல் ரீதியாகவும், இந்து சம்பிரதாயப்படியும் நடைபெறும். ஓர் நல்ல நாளில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இவ்விழாவில் கருவுற்ற பெண்ணிற்கு அவரது தாய்வீட்டில் இருந்து அறுசுவை உணவுகள் (புளி சாதம், சக்கரை பொங்கல், தக்காளிசாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம்) என்று சமைத்து கொண்டுவருவார்கள். முக்கியமாக இடம்பெறுவது, பூ, பழம், வலையல், மஞ்சள், ஆகிவையாகும். அப்பெண்ணிற்கு புத்தாடை அணிவித்து அனைவரின் முன்னிலையில் மாப்பிள்ளை வீட்டிற்கு வெளியில் அமரவைத்து சந்தனம் பூசி, அனைத்து பெண்களும் வளையல் அணிவிப்பார்கள். வளையல் அணிவித்தவுடன் அனைவரிடமும் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்வாகள். வளைகாப்பு முடிந்தவுடன் பெண் தன்னுடைய தாய்வீட்டிற்கு அழைத்து சென்றுவிடுவார்கள் குழந்தை பிறக்கும் வரை அவர் அங்கேயே இருப்பார்கள். வசதியாக உள்ளவர்கள் பெண்ணிற்கு தங்க வளையல் அணிவிப்பார்கள். வசதி இல்லாதவர்கள் ஐம்பொன்னால் செய்யப்பட்ட வலையளை அணிவிப்பார்கள்.[19]

**காதணி விழா**

இருளர்கள் காதுகுத்தும் சடங்கை ஆடம்பரமாகக் கொண்டாடுவதில்லை. பெயர் வைக்கும் நாளன்றே ‘‘சரசால்’’ (உச்சிமுடி) எடுத்து மொட்டை அடித்தபின் இருளர் இனத்தில் பெரியவர் ஒருவர் பித்தளைக் கம்பியால் காதுகுத்துவர்கள். பெரும்பாலானோர் காதுகுத்துவதற்கு காரச்செடியில் இருக்கும் நீண்ட முள்ளையே பயன்படுத்தி காதுகுத்துவார்கள்.

**இறப்புச் சடங்குகள்**

இறந்தவர்களை மல்லாக்கப்படுக்க வைத்த நிலையில் தலைப்பக்கம் வடக்கே இருக்கவும், முகம் கிழக்கு நோக்கியபடி திரும்பி இருக்கும்படியாகவம் புதைப்பர். புதைகுழியை பாதிமூடியவுடன் நாகதாளிக்கள்ளிடை (Opuntiadilleni) உள்ளேயிட்டு

அதன்மேல் மண்ணிட்டு மேடை அமைப்பர். புதைகுழியின் மீது நினைவுக்கல் ஏதும் வைக்கும் வழக்கம் இவர்களிடையே இல்லை.[20]

இருளர்களின் இறப்புச் சடங்குகள் தனித்துவமானவை. இருளர் இனத்தின் உட்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் தனித்தனியாகச் சமாதிகள் உள்ளன. சமாதி ‘‘செப்பே’’ என்று அழைக்கப்படுகிறது. இழவு வீட்டிற்கு வரும்பொது கையில் குச்சியுடன் வருவது இவர்களின் மரபு ஆகும். வயதானவர்கள் இறந்தால் காய்ந்த குச்சியும், இளயவதினர் இறந்தால் பச்சை குச்சியும் கொண்டு வருவார்கள். இல்லையேல் குற்றத்திற்கு நிகரானதாகக் கருதப்படுகிறது.[21]

**முடிவுரை**

ஜனவரி 8-14 ஒவ்வொரு வருடமும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க வாரம் கொண்டாடப்படுகிறது. அதோடு மட்டுமில்லாமல் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்டு 9 ஆம் தேதி உலகப் பழங்குடிகள் தினமாக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகில் பல்வேறு நாடுகளில் சிறு சிறு குழுக்களாக வாழும் பழங்குடியினருக்கான உரிமைகள், வாழ்வாதாரம் மற்றும் அடிப்படைத் தேவைகளைக் காக்கும் நோக்கத்தோடு இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரிடமும் இயல்பாக பழகக்கூடியவர்களாகவும் அனைவரிடத்திலும் ஒற்றுமையுடனும் காணப்படுகிறார்கள். ஒரு சமூகம் ஒற்றுமையாக இருந்தால் தான் ஒரு வளமான நாட்டை உருவாக்க முடியும். பழங்குடியினர்கள் நலத்தையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்க அரசு 1989ம் ஆண்டு தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலத்தில் பழங்குடியினர் அருங்காட்சியகம் கொண்டு வரப்பட்டது. இதன்முக்கிய நோக்கம் பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றை பாதுகாப்பது ஆகும். இவ்வருங்காட்சியகத்தில் இப்பழங்குடி மக்களின் பாரம்பரியமான வீடுகள், கலை சார்ந்த பொருட்கள், கூடைகள், அவர்கள் பயன்படுத்தும் பொருட்கள், வழிபாடுகள், மருத்துவத்திற்கு பயன்படும் மூலிகைகள், உணவுகள், விவசாயத்திற்கு பயன்படும் பொருட்கள் என அனைத்தையும் பாதுகாத்து வருகிறார்கள்.

இயற்கையைக் கண்டு அஞ்சி அதனால் இயற்கையை வணங்கிய மனிதன் தம் வாழ்வில் உயர்வும், தாழ்வும் இயற்கையாகவே நிகழ்கிறது என்று நம்பினார்கள். காடுகளில் வாழ்ந்த காரணத்தினால் மூலிகைச் செடிகள், விலங்குகள் மீது நம்பிக்கை வைத்து வழிபடுவார்கள். இருளர்கள் அதிக தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவம், பிற சமூகத்தினரோடு இணைந்து பொதுவழிபாடு செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் வாழ்நாள் முழுவதும் சடங்குகளும், சம்பிரதாயங்களும் நம்பிக்கை மிகுந்தவையாக உள்ளது என்பதை இக்கட்டுரையின் மூலம் நாம் அறிந்துகொள்வோம்.

1. மக்கள் சாசனம், 2016-2017, ஆதிதிராவிடர் நலத்துறை, தமிழ்நாடு, ப.1
2. வரவு-செலவு செயலாக்கத்திட்டம், 2007-2008, தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, ப.62
3. முனைவர் ச.அரிச்சந்திரன், தமிழகப் பழங்குடிகள் நூல் (வரலாறும், சமூகப் பண்பாடும்), பக்.43-44
4. தமிழக தொல்குடிகள் (தென்னிந்திய குலங்களும் குடிகளும்) (எட்கர் தர்ஸ்டன், தமிழ் க.ரத்தினம்), ப.3
5. மகேசுவரன், சி., தமிழக இருளர் பழங்குடியினர் தேவை ஒரு பன்முகப்பார்வை, தமிழ் நூலகம், கோயம்புத்தூர்
6. செங்கோ – வனாந்திரப்பூக்கள்
7. முனைவர் ச.அரிச்சந்திரன், தமிழகப் பழங்குடிகள் நூல் (வரலாறும், சமூகப் பண்பாடும்), ப.91
8. கள ஆய்வு, டிசம்பர், 26, 2020 (சித்ரா சாத்தமை கிராமம்)
9. கள ஆய்வு, டிசம்பர், 27, 2020 (சித்ரா சாத்தமை கிராமம்)
10. பா.தேவகி, தமிழர் பண்பாட்டில் இருளர்கள், குலமரபுகள், பக்.84-85
11. கள ஆய்வு, டிசம்பர், 15, 2020 (ஆலத்தூர் கன்னியம்மாள்)
12. http//www.muthukamalam.com
13. கள ஆய்வு, மார்ச், 08, 2020 (கன்னியம்மன் பூசாரி ரவிச்சந்திரன்)
14. பா.தேவகி, தமிழர் பண்பாட்டில் இருளர்கள், குலமரபுகள், பக்.90-91
15. மேலது,
16. மேலது,
17. மேலது,
18. கள ஆய்வு, நவம்பர், 11, 2020 (கன்னியப்பன், எடையான் குப்பம்)
19. கள ஆய்வு, நவம்பர், 12, 2020 (லட்சுமி, தையூர்)
20. பக்தவச்சல பாரதி, தமிழக தொல்குடிகள் (தமிழ் க. ரத்தினம்), ப.17
21. http//www.muthukamalam.com